**ஐக்கிய அமெரிக்க தூதரகம்**
**கொழும்பு**

# ஊடக அறிக்கை

**பொது அலுவல்கள் பிரிவு**
**தொ.பே.: +94 (1) 249-8100 ● பெக்ஸ்: +94 (1) 244-9070**
ஈமெயில்: VanHornNT@state.gov ● http://lk.usembassy.gov

ஊடக அறிக்கை இலக்கம்: 20190507

## ஜனாதிபதியின் ரமழான் செய்தி, 2019

புனித ரமழான் மாதத்தை அனுஷ்ட்டிக்கும் அனைத்து முஸ்லிம்களுக்கும் என் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

ரமழானானது புனித குர்ஆன் முஹம்மத் நபிக்கு அருளப்பட்ட நிகழ்வை கொண்டாடுகிறது. பிறை கண்டவுடன், இந்நிகழ்வை தனிப்பட்ட பிரதிபலிப்பு, ஆன்மீக புதுப்பிப்பு, மற்றும் பிரார்த்தனைகள் மூலம் முஸ்லிம் குடும்பங்கள் மற்றும் சமூகங்கள் கௌரவிக்கின்றனர்.

ரமழான் காலத்தில், முஸ்லிம்கள் விடியற்காலை முதல் அந்திமாலை வரை நோன்பு இருந்து, குர்ஆன் வாசகங்களை படித்து, பிறருக்கு உன்னதமான அன்பின் செயல்கள் மற்றும் நல்வாழ்வுகளை செய்து, அவ்வாறு செய்வதன் மூலம் இறைவனுடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும் தங்கள் நன்றியுணர்வை அதிகரிக்கும் விதத்தில் தங்கள் சொந்த ஆன்மீக பயணத்தில் புதுப்பிக்கப்பட்ட உணர்வுகளை வளர்த்துக்கொள்கிறார்கள்.

இந்த மாதம் முழுவதும், நாம் எல்லோருக்கும் கொடுக்கப்பட்ட அருட்கொடைகளை பிரதிபலிக்க, ஒருவரோடு ஒருவர் அதிக நட்புறவுடன் செயற்பட ஒரு வாய்ப்பாகவும் அமைந்துள்ளது. ஒன்றாக, ரமழான் உணர்வுடன், நாம் இன்னும் இசைவுள்ள மற்றும் மரியாதைக்குரிய சமூகத்தை அடைய முடியும்.

அமெரிக்காவிலும், உலகெங்கும் உள்ள முஸ்லிம்களுக்கு ஒரு சிறந்த, அருள்மிக்க மாதத்திற்கான வாழ்த்துக்களை தெரிவிப்பதில் என்னுடன் மெலனியாவும் இணைந்து கொள்கிறார்.